செ.வெ.எண்: 27/2020 நாள்: 12.02.2020

**மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம்**

**மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருப்பூர் மாவட்ட ஆட்சியரக அலுவலக கூட்டரங்கில், இன்று (12.02.2020) மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திருப்பூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து அனைத்து அரசு துறை அலுவலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவன உறுப்பினர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அறிவுரைகளை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

முன்னதாக, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு சார்பில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டு குழந்தைகள் பாதுகாப்பில் அனைத்து துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் திருமதி.சத்தியபாமா, துணைத்தலைவர் திருமதி.சிவகாமி, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் திரு.ம.செல்வம், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.அம்பிகா, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி.மரகதம், காவல் துறை அலுவலர்கள், கல்வித்துறை, தொழிற்சாலைகள் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், தொழிலாளர் நல ஆய்வாளர், மாவட்ட மாற்றுத்திறனாளி நல அலுவலர், இளைஞர் நீதிக்குழு உறுப்பினர், குழந்தைகள் நலக்குழு தலைவர் & உறுப்பினர், சைல்டுலைன் 1098 அமைப்பினர் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவன நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருப்பூர் மாவட்டம்.**